பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
23 05 2025 6 45
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மின்னணு சாதனங்கள் உற்பத்தியில் சர்வதேச அளவில் இந்தியா முன்னணியில் திகழ்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

2. தமிழகத்திற்கான ரயில்வே கட்டமைப்புகளை மேம்படுத்த உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. அரிய வகை உயிரினங்களைப் பாதுகாக்க மாநில அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக வனத்துறை அமைச்சர் திரு ராஜ கண்ணப்பன் கூறியுள்ளார்.

4. சிப்காட் நிறுவனத்தின் மூலம் தமிழகத்தில் ஒரு லட்சத்து 99 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. உலகக் கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் Raiza Dhillon வெள்ளிப் பதக்கம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

மின்னணு சாதனங்கள் உற்பத்தியில் சர்வதேச அளவில் இந்தியா முன்னணியில் திகழ்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் மின்னணு தொழில்துறையினர் மற்றும் கல்வியாளர்கள் பங்கேற்ற கூட்டத்தில் பேசிய அவர், உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டம் இத்துறையில் நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றும் என தெரிவித்தார்.

செமிகண்டக்டர் இயக்கம், செயற்கை நுண்ணறிவு இயக்கம், தேசிய ரோபோட்டிக் இயக்கம் போன்ற முன்னணி திட்டங்களை மத்திய அரசு தொடங்கியுள்ளதாகவும், இதன் மூலம் மின்னணு உற்பத்தியில் நாடு சர்வதேச அளவில் முன்னிலை பெறும் என்றும் அவர் கூறினார்.

இந்தத் துறையில் எதிர்கால தேவைகளுக்கு ஏற்ற பணியாளர்களை உருவாக்க தொழில்துறையினரும், கல்வியாளர்களும் இணைந்து செயல்பட வேண்டும் என்று திரு. அஸ்வினி வைஷ்ணவ் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தமிழகத்திற்கான ரயில்வே திட்டங்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவுக்கும் தமிழக மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்வதாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் மட்டும் 27 ரயில் நிலையங்கள், 3 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளதாகவும், நேற்று பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 9 ரயில் நிலையங்கள் 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்பட்டுள்ளதாவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் ரயில்வே கட்டமைப்புகளை மேம்படுத்த பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு உரிய நிதி ஒதுக்கீடு செய்து வருவதாகவும் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அரிய வகை உயிரினங்களைப் பாதுகாக்க மாநில அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக வனத்துறை அமைச்சர் திரு ராஜ கண்ணப்பன் கூறியுள்ளார்.

தமிழக வனத்துறை மற்றும் மாநில உயிரி பல்வகைமை வாரியத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், தமிழ்நாடு பருவநிலை மாற்ற இயக்கம், பசுமைத் தமிழக இயக்கம், ஈரநிலங்கள் பாதுகாப்பு இய்ககம் ஆகியவற்றின் மூலம் பல்லுயிர்ப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

தஞ்சை மற்றும் புதுக்கோட்டை கடற்பசு பாதுகாப்பு மையம், திண்டுக்கல்லில் தேவாங்கு சரணாலயம் போன்றவையும் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தமிழ்நாடு உயிர்ப் பல்வகைமை வாரியத்தின்கீழ் 13 ஆயிரத்து 600 பல்லுயிர் மேலாண்மை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக திரு. ராஜகண்ணப்பன் கூறினார்.

<<<>>>

சிப்காட் நிறுவனத்தின் மூலம் தமிழகத்தில் ஒரு லட்சத்து 99 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிப்காட் மேலாண்மை இயக்குநர் திரு. செந்தில்ராஜ் பேசுகையில், தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் இந்நிறுவனம் கடந்த 50 ஆண்டுகளாக முக்கிய பங்காற்றி வருவதாகக் கூறினார்.

24 மாவட்டங்களில் 50 தொழிற்பூங்காக்கள் உள்ளதாகவும், இதன் மூலம் 8 லட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் திரு. செந்தில்ராஜ் தெரிவித்தார்.

<<<>>>

இந்தியா கடந்த 11 ஆண்டுகளில் நீடித்த பொருளாதார வளர்ச்சி இலக்கை எட்டியுள்ளதாக தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கூறியுள்ளார்.

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்தியாவின் வளர்ச்சியை தற்போது உலக நாடுகள் உற்று நோக்குவதாகத் தெரிவித்தார்.

இளைஞர்கள் நாட்டின் முன்னேற்றத்தில் முக்கிய பங்காற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பின்னர் ‘கண்டதேவி திருத்தேரோட்டமும் - சமுதாய நல்லிணக்கமும்’ என்ற கூட்டத்திலும் ஆளுநர் பங்கேற்றார்.

சமூக அமைப்புகளும், சங்கங்களும் நாட்டின் முன்னேற்றத்திற்காக பணியாற்ற வேண்டும் என்று திரு. ஆர்.என். ரவி கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்று 4 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதும் தேர்தல் வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

விருதுநகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். திமுக அரசு வாக்கு வங்கி அரசியலை கருத்தில் கொண்டு செயல்படுவதாகவும், மக்கள் நலனில் அக்கறை செலுத்தவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

சொத்து வரி உயர்வு, மின் கட்டணம் மற்றும் பால் விலை உயர்வு போன்றவற்றால் மக்கள் இன்னலுக்கு ஆளாகியுள்ளதாக திரு. நாகேந்திரன் தெரிவித்தார்.

<<<<>>>>

கோடை விழாவின் ஒரு பகுதியாக குன்னூர் சிம்ஸ் பூங்காவில் இன்று பழக் கண்காட்சி தொடங்குகிறது.

சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் 4 டன் பழங்களைக் கொண்டு இந்தக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

கொடைக்கானலில் கண்கவர் காற்றாடி நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ட்ராகன், பஞ்வர்ணக்கிளி உள்ளிட்ட உருவங்கள் கொண்ட ராட்சத காற்றாடிகள் பறக்கவிடப்பட்டதை சுற்றுலாப் பயணிகள் ஆர்வமுடன் கண்டு ரசித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலாவன ஐந்தாவது கட்ட அணுசக்திப் பேச்சுவார்த்தை இத்தாலியின் ரோமில் இன்று தொடங்குகிறது.

-----------

வாஷிங்டன் சென்றுள்ள தென்னாப்பிரிக்க அதிபர் திரு சிரில் ராமபோசா, வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் திரு டொனால்டு டிரம்புடன் பேச்சு நடத்தினார்.

-----------

மத்திய அரசின் வீட்டு வசதித் திட்டங்களின் கீழ் வீடுகள் ஒதுக்கீட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கு 4 சதவீத ஒதுக்கீடு வழங்கப்படும் என வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு மனோகர் லால் அறிவித்துள்ளார்.

-----------

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம், நாமகிரிப்பேட்டை பகுதிகளில் 21 திட்டப் பணிகளுக்கு மாநில ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு மதிவேந்தன்  அடிக்கல் நாட்டினார்.

-----------

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் கோடை விழா மற்றும் மலர்க் கண்காட்சி இன்று தொடங்குகிறது.

-----------

கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் திருமதி அழகு மீனா தலைமையில் நடைபெற்றது.

-----------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்படுத்த பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகளை தமிழக சட்டமன்ற மதிப்பீட்டு குழுவினர்  ஆய்வு செய்தனர்.

-----------

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டத்திற்குட்பட்ட 4 கிராமங்களுக்கான வருவாய் தீர்வாயம் மாவட்ட ஆட்சியர்  திரு ரஞ்ஜித் சிங் தலைமையில் நடைபெற்றது.

-----------

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் கடந்த 30 நாட்களில் பக்தர்கள் 1 கோடியே 41 லட்சம் ரூபாய் உண்டியல் காணிக்கை செலுத்தியுள்ளதாக கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

-----------

சென்னை ஆதம்பாக்கத்தில் புதிய பல்நோக்கு மையம் அமைக்க மாநில அமைச்சர்கள் தாமோ அன்பரசன் மற்றும் சேகர் பாபு அடிக்கல் நாட்டினர்.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் Raiza Dhillon வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஜெர்மனியின் Suhl-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் Skeet பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது.

----------

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Ishaque Iqbal – நிதின் குமர் சின்ஹா இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-1, 7-5 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் அலெக்சி - இவான் இணையை வென்றது.

<<<<>>>>